# இறைத்தூதன்

## கத்தோலிக்க வார இதழ்


நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை; அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல. தம் படைப்புகளுள் நாம் முதற்கனிகளாகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார். உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்க வல்லது. இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். (மாற்கு 1: 17-18)



# தீபகற்ப மலேசிய கத்தோலிக்க ஆயர்களின் தேசிய & மலேசிய தினச் செய்தி 2021

அன்புள்ள சகோதர-சகோதரிகளே,

ஒவ்வொரு ஆண்டும், ஆகஸ்டு 31 மற்றும் செப்டம்பர் 16 ஆகிய தினங்களில், நாம் பல வழிகளில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியில், நாம் அனுபவித்துவரும் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தி நமது தேசியத்தை கொண்டாடி வருகிறோம்.

கடந்த ஆண்டைப்போலவே, இவ்வாண்டும் 'அக்கறை கொள்ளும் மலேசியா' என்பது நமது கருப்பொருளாக உள்ளது. மக்களின் வாழ்வை வெகுவாகப் பாதித்துள்ள உடல் நலம், பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி போன்ற இருண்ட பிரச்சனைகள் மத்தியில் நமது கொண்டாட்டங்கள் மிதமான அளவில் கொண்டாடப்படவுள்ளது. தொடர்ந்து நிலவி வரும் கோவிட்-19 எனும் தொற்று பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்து, சமயம், இளைஞர் அல்லது பெரியவர் என்ற பாகுபாடின்றி அனைத்து மலேசியர்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளது. உளவியல், உணர்ச்சி மற்றும் ஆன்மீக ரீதியாகவும் நாம் கற்பனை செய்ய முடியாத வகையில் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் நாம் சமத்துவத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். தொற்றுநோயால் தங்களது அன்புகுரியவரை இழந்ததன் காரணமாக, குடும்பச் சுமையைத் தாங்குவோர் நிலையும் பரிதாபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த தொற்றுநோய் மலேசிய பொருளாதார வளர்ச்சியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வணிகங்கள் முடங்கிக் கிடப்பதும், வருமானம் குறைந்து போனதும் மற்றும் வேலை இழப்பும் சாதாரண குடிமக்களின் அன்றாட வாழ்விலும், அன்னியத் தொழிலாளர்கள் வாழ்க்கையிலும் சொல்வதற்கரிய தாக்கதை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

2020-ம் ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கிய அரசியல் நெருக்கடியினால், 14-வது பொதுத்தேர்தலுக்குப் பின் இரு முறை ஆட்சி மாறியதால் நாட்டின் அரசியலில் உறுதியற்றத் தன்மை தலைத்தூக்கியது. இதனிமித்தம் நாட்டில் இப்போது விரக்தியும் உதவியற்ற உணர்வும் மக்கள் மத்தியில் துளிர்த்துள்ளது. புதிதாக நியமனம் பெற்றுள்ள பிரதமர் டத்தோ ஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் அவர்கள் அவரது அமைச்சரவையோடு, இந்த மூன்று நெருக்கடிகளிலிருந்தும் அனைவரையும் விரைவில் விடுவித்து முன்னோக்கிச் செல்ல வழிவகுக்க வேண்டும். மாண்புமிகு பிரதமர் நாட்டிற்கு அவர் அளித்தத் தொடக்கவுரையில் கொடுத்த வாக்குறுதிகளை மதிக்குமாறு நாம் அன்புடன் வேண்டுகிறோம். பயமும் பாரபட்சமுமின்றி மலேசியாவின் மீட்பைக் கவனத்தில் கொண்டு, ஒருமைபாடு, பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதே வேளையில் மலேசியா கொண்டிருக்கும் ஒவ்வொரு பண்பாட்டையும், சமயம் மற்றும் இனங்களின் செழுமையையும், பன்முகத்தன்மையையும் மதித்து வாழும் சமூகம் ஏற்பட பிரதமர் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்



நாம் ஒன்றுபட்ட, மரியாதைக்குரிய, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான ஒரு 'அக்கறை கொள்ளும் மலேசியா' என்பதை உருவாக்க வேண்டுமானல், இந்நாடு தொடர்ந்து 'ருக்குன் நெகாரா' கோட்பாடுகளில் கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டிலுள்ள அனைத்து அரசியல் தலைவர்களும், அரசு மற்றும் எதிர்கட்சிகளும் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளையும் தனிப்பட்ட இலக்குகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, மலேசியர்கள் நம் மத்தியில் உதவித் தேவைப்படும் மக்களின் நலன் கருதி ஒன்றாக ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். மேலும், நாம் விரைவில் நலம்பெற அனைவரும் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்றும் அழைப்புவிடுக்கிறோம்.

தொடர்ந்து, இக்காலக்கட்டத்தில், மக்களின் நலன் கருதி பலரால் வெளிப்படுத்தப்பட்ட தாராள மனப்பான்மை, சுய தியாகம் மற்றும் மனவுறுதியுடன் பணியாற்றிவரும் உணவு விநியோகிப்பாளர்கள், பாதுகாப்பு, உடல்நலம் காப்போர், துப்புரவு பணியாளர்கள், ஆபத்தான சூழலில் பணிபுரியும் அனைத்து முன்னிலை பணியாளர்கள் மற்றும் நம் கண்ணுக்குத் தெரியாத பல நல்லுள்ளம் கொண்ட அர்ப்பணிப்பாளர்கள் ஆகியோரின் தியாகத்தைச் சிந்தித்துப் பார்க்கிறோம், அவர்களுக்கு நன்றி கூறுகிறாம்.

ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் பணி, வசதியுடைய அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைச் சார்ந்தது மட்டுமல்ல. மாறாக, அனைத்து மலேசிய குடிமக்களையும் சார்ந்தது. நாம் தேர்வுச் செய்யும் அனைத்துத் தலைவர்களும் அவர்கள் பொறுப்பேற்றுள்ள அமைச்சின் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்ப்பார்க்கும் வேளையில், நாமும் அடிமட்டத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க உழைக்க வேண்டும். பிரிவினை அரசியல் என்பது நம்மில் தொடரும் கதையாக இருக்கக்கூடாது. ஏனெனில், நம் ஒவ்வொருவருக்கும் நம் அன்றாட வாழ்வில் ஒற்றுமையை பேணி வளர்க்க வாய்ப்பு உள்ளது. நம்மில் நிலவும் அக்கறையின்மையினாலும், அடுத்திருப்பவரின் தேவையைப் புறக்கணிப்பதினாலும், குடிமக்களாகிய நமது கூட்டுப் பொறுப்பையையும் கடமையையும் இழந்து விடக்கூடாது. நம் அன்றாட வாழ்க்கையில், தன்னலப் போர்வையில் நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளும் மனப்போக்கைக் கொண்டிருந்தால், நம்மில் இரக்க மற்ற தன்னலப்போக்கு மட்டுமே வெளிப்படும்.

திருஅவைக்கான புனித பேதுருவின் அறிவுறுத்தலுக்குச் செவிசாய்ப்போம். "நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள் கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள்.

எனவே, உங்களுள் ஒவ்வொருவருக்கும் தாம் பெற்றுக் கொண்ட அருள் கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள்," (1 பேதுரு 4:10). உண்மையில், நம் நாட்டின் எதிர்காலமும் அதன் அனைத்து குடிமக்களின் நல்வாழ்வும், குறிப்பாக ஏழைகள், உதவிக்கு ஏங்குவோர் மற்றும் இத்தொற்று நோயால் பாதிப்புக்குள்ளானோரின் வாழ்வனைத்தும் நம் ஒவ்வொருவரின் இன்றைய அர்ப்பணிப்பைப் பொறுத்துள்ளது.

அக்கறை கொள்ளும் மலேசியாவாக பயணிக்க, ஒன்றிணைந்து, கடவுளின் உதவியுடனும் அவரது வழிகாட்டுதலிலும் மலேசியாவின் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்.

*SELAMAT MENYAMBUT HARI MERDEKA DAN HARI MALAYSIA!*

கிறிஸ்துவில்,
ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்,
பினாங்கு மறைமாவட்டம்

பேராயர் ஜூலியன் லியாவ்,
கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

ஆயர் பெர்னர்ட் பவுல்,
மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்

# 'நான்' என்பது, மதிப்பு மிக்க ஒரு கொடை

**வத்திக்கான்:** கோவிட் பெருந்தொற்றின் தாக்கத்தால் 'மக்களிடையே நட்புறவு' என்ற கூட்டம் இத்தாலியின் ரிமினியில் சென்ற ஆண்டு நேரடியாக நடைபெற இயலாமல், போனதையடுத்து, இவ்வாண்டு மீண்டும் இக்கூட்டம் நேரடியாக நடைபெறுவது மகிழ்வளிக்கிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வோருக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் கூறியுள்ளார்.



'மக்களிடையே நட்புறவு' என்ற கருத்துடன் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் இக்கூட்டம், இவ்வாண்டு நடத்தும் 42 ஆம் ஆண்டு கூட்டத்திற்கு, "நான் என்று சொல்வதற்குத் துணிவு" என்ற மையக்கருத்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு திருத்தந்தை தன் பாராட்டுக்களை வெளியிட்டுள்ளார்.

ஒவ்வொருவருக்கும் இறைவன் வழங்கியுள்ள "நான்" என்ற சுய அடையாளம் மதிப்பு மிக்க ஒரு கொடை என்றும் அந்தக் கொடையை நம்மில் நாமே உணர்வதுபோல அடுத்தவரிடம் உணர்வதும் அதற்கு ஏற்றாற்போல் நட்புறவுடன் பழகுவதும் அவசியம் என்றும் திருத்தந்தை தன் செய்தியில் எடுத்துரைத்துள்ளார்.

*ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# கிறிஸ்தவ நம்பிக்கையின் மையமாக திருவழிபாடு மாறவேண்டும்

### 71வது தேசிய திருவழிபாட்டு கருத்தரங்கு

**வத்திக்கான்:** இத்தாலியின் Cremona என்ற நகரில் ஆகஸ்ட் 23, கடந்த திங்களன்று துவங்கிய 71வது தேசிய திருவழிபாட்டு கருத்தரங்கிற்கு திருத்தந்தையின் பெயரால் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

"இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக்



கூடியிருக்கின்றார்களோ"என்ற மையக் கருத்துடன் ஆகஸ்ட் 23-ல் துவங்கியுள்ள இக்கருத்தரங்கு ஆகஸ்ட் 26 வியாழனன்று நிறைவுபெற்றது.

### குழுவாக கூடிவருவது கிறிஸ்தவ மரபு

இயேசுவின் பெயரால் குழுவாக கூடிவருவது கிறிஸ்தவ வரலாற்றின் ஆரம்ப காலம் முதல் பின்பற்றப்படும் ஓர் அழகிய மரபு என்றும் இவ்வாறு கூடுபவர்களே கிறிஸ்தவர்கள் என்பதை அடையாளப்படுத்தின என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தொற்றின் காரணமாக கடந்த ஓராண்டுக்கும் மேலாக குழுவாகக் கூடி வரும் மரபு நிறுத்திவைக்கப்பட்டது என்பதை இச்செய்தியில் வருத்தத்துடன் குறிப்பிட்டார் திருத்தந்தை. இருப்பினும் அருள்பணியாளர்களும் பொதுநிலையினரும் படைப்பாற்றல் திறனுடன் கணிணி வழியே திருவழிபாடுகளை நிறைவேற்றிவந்துள்ளது மனதுக்கு நிறைவைத்தருகிறது என்று கூறியுள்ளார்.

திருப்பலி கொண்டாட தடை செய்யப்பட்டிருந்தாலும் கடந்த ஓராண்டின் முழு அடைப்பு காலங்களிலும் கிறிஸ்தவர்கள் பிறரன்பு பணிகளில் குறிப்பாக அதிக துன்பங்களைச் சந்தித்தவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணிகளில் தங்களையே ஈடுபடுத்திக் கொண்டது பாராட்டுக்குரியது என்று தன் செய்தியில் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

### திருவழிபாடுகளில் மக்களின் பங்கேற்பு குறைவு

பெருந்தொற்று காலத்திற்கு முன்னதாகவே திருவழிபாடுகளில் மக்களின் பங்கேற்பு குறிப்பாக இளையோரின் பங்கேற்பு சிறிது சிறிதாகக் குறைந்து வந்துள்ளது என்பதை வருத்தத்துடன் இச்செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையின் மையமாக திருவழிபாடு மாறுவதை உறுதிசெய்வது அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய முக்கியக் கடமை என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

திருவழிபாடுகளில் மறுமலர்ச்சியைக் கொணரும் நோக்கத்துடன் 71வது ஆண்டுக்கூட்டத்தில் பங்கேற்று வரும் உறுப்பினர்களுக்கு இறையாசீரை வழங்கி திருத்தந்தை தன் செய்தியை நிறைவு செய்துள்ளார்.

### நம் குழந்தைகள் எங்குள்ளார்கள்?

ஆதரவு மற்றும் வழிகாட்டுதலின் இடங்களாக குடும்பங்கள் இருப்பதால் அவை தங்கள் வழிமுறைகள் குறித்து மறுபரிசீலனை செய்து புதிய ஆதாரங்களைக் கண்டறிய வேண்டியது அவசியம். யார் குழந்தைகளுக்கு பொழுதுபோக்குகளை வழங்குகிறார்கள்? தொலைக்காட்சி மற்றும் மின்னியல் சாதனங்கள் வழியாக எத்தரப்பினர் அவர்களின் அறைகளுக்குள் நுழைகிறார்கள்? என்பதில் பெற்றோர் அக்கறை காட்டவேண்டும். அக்கறையுடன் எளிமையான வழியில் முக்கியமான விடயங்களைப் பேசி அவர்களுடைய நேரத்தைச் செலவிட ஆரோக்கியமான வழிகளைக் கண்டறிந்து நம் குழந்தைகளுக்காக நாம் நேரத்தை ஒதுக்கினால் மட்டுமே நாம் அவர்களைத் தீங்கிலிருந்து பாதுகாக்க முடியும்.

# காஜாங், திருக்குடும்பப் பங்கில் மீண்டும் அருங்கொடை இறைவேண்டல் தொடங்கப்பட்டது

**காஜாங்:** இங்குள்ள திருக்குடும்பப் பங்கில் இந்த பொது நடமாட்டக்கட்டுப்பாடு காரணத்தால் நிறுத்தப்படிருந்த அருங்கொடை இறைவேண்டல் மீண்டும் இயங்கலை, (zoom) வழியாக தொடங்கப்பட்டது. இந்த அருங்கொடை இறைவேண்டலில் ஏறக்குறைய நாற்பது பேர் கலந்து கொண்டனர். அன்றைய புகழ் அன்று நிறைவு அங்கமாக ஓரிரு சாட்சியங்கள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து அருள்தந்தையின் ஆசீரோடு இந்நிகழ்வு ஒரு முடிவை எய்தியது. இப்பணிக்குழுவிற்குத் தலைமையேற்றுள்ள சகோ. மெர்லின் அவர்கள் பாடற் குழுவினருக்கும், கலந்து




ஆராதனையை சகோதரி ஜேனட் செபமாலை அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார். தொடக்கத்தில் புகழ்ச்சி பாடல்களும், தொடர்ந்து, அருள்தந்தை வின்சன் தோமஸ் அவர்களின் இறைவார்த்தைப் பகிர்வும் இடம் பெற்றது. ஏறக்குறைய ஒரு மணி நடைபெற்ற அருங்கொடை ஆராதனை பலருக்கு மன நிறைவை அளிந்ததாகக் கலந்துகொண்டோரில் சிலர் கருத்துரைத்தனர். முன்பு பங்கில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வந்த அருங்கொடை இறை வேண்டல் கோவிட்-19 தொற்றின் காரண மாக தடைபட்டிருந்தது. ஆனாலும், பங்குத் துணைத்தந்தை வின்சன் தோமஸ் அவர் களின் ஆலோசனையின் பேரில் தொடர்ந்து இயங்கலை வாயிலாக ஒவ்வொரு மாதமும் மூன்றாவது செவ்வாய்க்கிழமைகளில் நடை பெறத் திட்டமிடப்பட்டது.

கொண்டோருக்கும், அருள்தந்தை வின்சன் தோமஸ் அவர்களுக்கும் நன்றி கூறினார்.



மலேசியர்கள் அனைவருக்கும் ‘தெ ஹெரால்டு’ வார இதழின் தேசிய & மலேசிய தின நல்வாழ்த்துக்கள்

# வெளிவேடம் கிறிஸ்துவுக்கு ஆகாது!

இன்றைய முதல் வாசகத்தில் 'உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளை நான் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன்; அவற்றைப் பின்பற்றுங்கள். நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள்' என்றும், இரண்டாம் வாசகத்தில் 'இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்' என்றும், நற்செய்தியிலே 'வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும்.' என வாசிக்கிறோம்.

ஆம், கடவுளின் சட்டங்களுக்கு என்றும் பணிந்து நடந்தால் நம் வாழ்வு வளம் பெறும். ஆண்டவர் முன் அனைத்து சேவையும் புனிதமானதுதான். கைகால் சுத்தம் செய்தல் பாத்திரங்களை கழுவுதல் பற்றிய உரையாடலில் ஓர் ஆழமான சமய உண்மை அடங்கியுள்ளது. பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் அகத் தூய்மைக்கும் புறத்தூய்மைக்கும் உள்ள தொடர்பு உள்ளத்தை மறைக்கும் கபட நாடகத்தின் தீமைகள் ஆகியவை பற்றிய வாதங்கள்.

தொடக்க நூலிலே வழிபாட்டிற்காக சாட்சியக் கூடாரத்திற்குள் நுழையும் போதும் ஆண்டவருக்குத் தூப வகைகளை ஒப்புக்கொடுக்கும்படி பலிபீடத்திற்கு வரும் போதும் கைகால்கள் கழுவ வேண்டும் என வலியுறுத்துகிறது. திருவழிபாட்டின் போது மட்டுமின்றி மக்கள் உண்ணும் முன்பும் கை கழுவ வேண்டும் என்றும் தீட்டுப்பட்ட கரங்களுடன் இறை புகழ் கூறி உணவருந்தினால் அவ்வுணவும் தீட்டுப்பட்டதாகும் எனவும் பரிசேயர் கூறினர்.

இந்த அடிப்படையில்தான் பாத்திரங்கள், கிண்ணங்கள், செம்புகள் போன்றவற்றையும் பயன்படுத்தும்முன் சுத்தம் செய்தனர். தாங்கள் கடைபிடித்த இந்த ஒழுங்கு முறைகளை இயேசுவின் சீடர்கள் பின்பற்றாததால் பரிசேயர்கள் இவர்களைக் கடுமையாக விமர்சித்தனர்.

கைகழுவுதல், பாத்திரங்களைச் சுத்தம் செய்தல் என்பன எடுத்துக்காட்டுகளேயாகும். பழமையான வெளி ஆதாரங்களை கண் மூடித்தனமாக கடைப்பிடிப்பது நம்பிக்கை வாழ்வுக்குத் தேவைதானா என்பதே அடிப்படைக் கேள்வி. வெளி சடங்குகளில் அன்று ஆத்மார்த்தமான அன்புத் தொண்டில் தூய உள்ளத்துடன் செய்யப்படும் வழிபாட்டில் தான் புனிதத் தன்மை அடங்கியுள்ளது என்பதை இயேசு வலியுறுத்துகிறார். செபக் கூடங்களில் முதல் இருக்கைகளையும் பொது இடங்களில் வணக்கத்தையும் விரும்பும் பரிசேயரின் வெளிவேடமாகிய புளிப்பு மாவைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி கூறியுள்ளார் இயேசு.

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்தும் நல்லவைதான். உணவு மனித உள்ளத்தையும் ஆன்மீகத் தூய்மையையும் பாதிப்பதில்லை. உள்ளமே நன்மைக்கும் தீமைக்கும் அடிப்படை.

இரக்கமே உருவான இயேசு வெளிவேடதாரிகளைக் கடுமையாகத் தாக்குகிறார். ஆலயத்திற்கு செல்வதாலோ, மற்றவர் முன் நல்லவன் என்று பெயர் எடுப்பதாலோ ஒருவன் இறைவனுக்கு ஏற்புடயவனாகி விடுவதில்லை. உள்ளத்தில் நல்லெண்ணமும், சொல்லில் உண்மையும், செயலில் நேர்மையும் உள்ளவரே இறைவனின் அருளைப் பெறுவர்.

வெளி சடங்குகளில் கவனம் செலுத்துவதைவிட மனத்துக்குள் மாசிலாமல் குற்ற மற்று நடப்பதில் முயற்சித்தல் அவசியம்.

-ஆவி. டேவிட், குளுவாங்

### பொதுக்காலம் 22-ஆம் ஞாயிறு

முதல் வாசகம்: இ.ச 4:!-2,6-8,
தி.பாடல்: 15:2-3, 3-4, 5
2ம் வாசகம்: 1 யாக் :!7-18,21-22,27
நற்செய்தி: மாற்கு7:1-8, 14-15,21-23.

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 2**